## முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
## எம்.சி.ஓ.பி. எண். 161/2018

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 7ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சரவணன் | | |
| த/பெ. | ராஜன் | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | வன்னிபாக்கம் | வயது | 39 |
| தொழில் | ஓய்வு | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 6வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன். ம.சா.ஆ.5 ஆவணம் நகல் என்பதால் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்ட்டதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | வாகன பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ 3 | காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ 4 | ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 6 | கதிரியக்கப்படம் அசல் |
| நி. ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

14.03.2018 ல் காலை 11.30 மணியளவில் விபத்து நடந்தது. நான் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற போது பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டது. மீஞ்சூர் ஆஞ்சனேயர் கோவில் சாலையில் விபத்து நடந்தது. விபத்து தொடர்பாக எனது மைத்துனர் தினேஷ் புகார் கொடுத்துர். விபத்து நடந்து 2 நாட்கள் கழித்துதான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் 32 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் விபத்து சமயத்தில் தலைகவசம் அணித்திருந்தேன். விபத்து சமயத்தில் என்னிடம் ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதை நான் நீதிமனற்த்தில் தாக்கல் செய்யவில்லை. எனது இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN–18–H–3673. எனது வாகனத்திற்கு காப்பீடு இருந்தது. எனது வாகனகத்தின் காப்பீடு நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றும் விதிகளை மீறி நான் இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டு நகல்,

மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல், குற்றப்பத்திரிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வயது வருமானம் தொழில் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட சொற்ப காயம் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. நான் திடீரென்று வண்டியை நிறுத்தியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி